**<u>DEPOSITION OF WITNESS</u>**
**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**
**<u>IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR</u>**

| | | |
|---|---|---|
| CC | : | 57/ 2024 |
| Deposition of Witness for | : | PW. 5 (LW- 10 ) |
| Name | : | திரு தமிழ்ச்செல்வன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜரில்லை எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு.317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 23rd day of January 2026.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று ஏமூரில் வசிக்கின்றேன். கடந்த 09.04.2023-ம் தேதி நான் தாந்தோணிமலை காவல்நிலையத்தில் உதவி ஆய்வளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது கரூர் அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்திலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்அடிப்படையில் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பொம்முராஜ் த/பெ.நாகப்பன் நாயக்கர், என்பவர் பேச முடியாமல் இருந்ததால் அவரது மகள் விஜயலட்சுமி என்பவரிடம் விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்து நிலையம் வந்து நி.கு.எண்.190/2023, ச/பி.279, 337 இ.த.ச.படி வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3** ஆகும்.

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து 10.04.2023–ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துசாமி மற்றும் மேகநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் தயார் செய்தேன். பின்பு சம்பவ இடம் குறித்து மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும். சாட்சிகள் முத்துசாமி, மேகநாதன், விஜயலட்சுமி, சரவணன், சிவக்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்விற்கு உட்படுத்த கடிதம் கொடுத்து அனுப்பினேன். பின்பு மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்றேன்.

**மேலும் ஆவணங்கள் குறியிட வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |